தாம்பரம் தொகுதிதான். அதிலேயும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருப்தி அடையாமல், சிட்லபாக்கத்திற்கு ஒரு துணை மின் நிலையம் கேட்டிருக்கிறார்கள். தேவை இருப்பின், சிட்லபாக்கத்தில் துணை மின் நிலையம் அமைக்க மின் வாரியம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

22—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***108613—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூரில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மேட்டூர் தொகுதியில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் பகுதி என்பது சேலம் மாவட்டத்தினுடைய மிக முக்கியத்துவம் வாய்ந்த பகுதி. பல்வேறு பள்ளிகள் நிறைந்த பகுதி. தொழிற்சாலைகள், குறிப்பாக, அனல் மின் நிலையம் இருக்கிற பகுதி. பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் அந்தப் பகுதியிலேயிருந்து படிப்பதற்கு வெளியூர் செல்லக்கூடிய நிலை இருக்கிறது. பலவகை தொழில்நுட்பக் கல்லூரி என்பது சேலம் மாவட்டத்திலே, மேற்குப் பகுதியிலே இல்லை. அதிலும் குறிப்பாக, மேட்டூர் வட்டம்,

2011 பிப்ரவரி 8]

எடப்பாடி வட்டம், அந்தியூர், அம்மாபேட்டை இவையெல்லாம் ஈரோடு மாவட்டப் பகுதிகள். சேலம் மாவட்டத்தினுடைய பெரும்பாலான பகுதி, ஈரோடு மாவட்டத்தினுடைய ஒரு பகுதி, தருமபுரி மாவட்டத்தினுடைய ஒரு பகுதி மக்கள் எல்லாம் படிப்பதற்கு மேட்டூரிலே ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி இருந்தால் ஏதுவாக இருக்கும்; துவக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; பொறியியல் கல்லூரி வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில், இன்னும் அது துவக்கப்பட அறிவிப்பு வரவில்லை. ஆகவே, பொறியியல் கல்லூரி வேண்டும். அது இல்லையென்று சொன்னால், எப்படியாவது மேட்டூர் பகுதியிலே தேவையைக் கருதி ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைத்தால் ஏழைக் குழந்தைகள், நடுத்தரக் குடும்பத்துக் குழந்தைகள் படிக்க வாய்ப்பாக இருக்கும். ஆகவே, அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்தாவது அதனைத் துவக்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவைக்கு வந்தவுடனே முதல் ஆண்டிலேயே வைத்த கோரிக்கை, மேட்டூருக்கு அரசுக் கலைக் கல்லூரி கொடுக்கப்பட வேண்டும் என்று. அதை உடனடியாக முதல்வர் அவர்கள் நிறைவேற்றிக் கொடுத்து, அந்தக் கல்லூரியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எப்பொழுதுமே, கொடுப்பவர்களைக் கண்டால், கேட்பவர்களுக்கு அதிகமாகக் கேட்க வேண்டும் என்று தோன்றும். அதிலே தவறு இருக்க முடியாது. எங்களைப் பொறுத்தவரையில், மேட்டூர் பகுதியிலே, அங்கே மொத்தம் இருக்கிற தனியார் கல்லூரிகளில் சேர்ந்து படிக்கிற மாணவர்களின் எண்ணிக்கை 6,440. இருக்கிற இடங்கள் 9,795. மேட்டூர் பகுதியிலே மட்டும் 2 சுய நிதிக் கல்லூரிகள் இருக்கின்றன. ஆகவே, தனியார் கல்லூரிகளிலேயே இடம் காலியாக இருக்கிறபோது, அரசுக் கல்லூரி துவக்குவதற்கான சாத்தியம் எதுவும் இல்லை. எல்லாக் கல்லூரிகளிலும் இடம் தீர்ந்துவிடுமானால் அதைப்பற்றிப் பரிசீலித்து, வருகிற காலங்களில் வாய்ப்புகள் இருக்குமானால் திறப்பதற்கு அரசு பரிசீலிக்கும்.

[2011 பிப்ரவரி 8

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததைப்போல மேட்டூர் பகுதியிலே பலவகை தொழில்நுட்பக் கல்லூரி இரண்டு இல்லை. தற்பொழுது புதியதாக தனியாராலே ஒன்று துவக்கப்பட்டிருக்கிறது. அதிலேயும் மாணவர்கள் சேர்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள். இருந்தாலும்கூட, 10 ஆம் வகுப்பு படித்த மாணவர்கள் 12 ஆம் வகுப்பு முடித்து உயர் கல்வி பெறுவதற்கு தொழில்நுட்பக் கல்வி பெறுவதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தினாலேதான் 10 ஆம் வகுப்பு முடித்த உடனே ஒரு தொழில்நுட்பம் பயில வேண்டும் என்ற அடிப்படையிலே அரசுக் கல்லூரி தொடங்கினால், கட்டணம் இல்லாமல் ஏழையெளிய நடுத்தர மக்கள், அதிலும் குறிப்பாக மலைவாழ் பழங்குடியின மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், மிகப் பிற்படுத்தப்படுத்தப்பட்ட மக்கள் படிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். தனியார் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரிகளிலே கட்டணம் செலுத்த இயலாத மாணவர்கள், நடுத்தரக் குடும்பம், ஏழைக் குடும்பத்து மாணவர்கள் படிப்பதற்கு அரசுக் கலைக் கல்லூரி இருந்தால் வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தினாலேதான், அதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார்கள். ஆகவே, அன்புகூர்ந்து நடப்பு ஆண்டில் அதனை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தால், அந்தப் பகுதி மக்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சூழல் உள்ளதால், அதனை மீண்டும் மறுபரிசீலனை செய்து, மேட்டூரில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்குவதற்கு ஆவன செய்வீர்களா என்பதை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தாலுகாவில் மட்டும் இரண்டு கல்லூரிகள் இருக்கின்றன. என்னிடம் கொடுக்கப்பட்ட குறிப்புகளின்படி காவேரி பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, காளிப்பட்டி கிராமம், மேச்சேரி, மேட்டூர் தாலுக்கா, சேலம் 1.

2011 பிப்ரவரி 8]

மற்றொன்று, காவேரி இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி, மேச்சேரி, மேட்டூர் தாலுகா, சேலம் என்று இரண்டு கல்லூரிகள் மேட்டூர் தாலுகாவில் மட்டும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. பொதுவாக, முன்னேறிய தாலுகாவில், இருப்பதைவிட பிற்படுத்தப்பட்ட மாவட்டங்கள் எவை என்பதைத் தேர்ந்தெடுத்து, மத்திய அரசாங்கமே இது போன்ற பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளைத் துவக்குதவற்காக அனுமதி அளித்திருக்கிறது. அந்த அடிப்படையில் இந்த ஆண்டு ஏழு கல்லூரிகள் துவக்கப்பட இருக்கின்றன. மீதம் இருக்கிற கல்லூரிகளையும், பின்தங்கிய மாவட்டங்களில் மத்திய அரசாங்கத்தினுடைய—அவர்கள் அதற்கு பட்டியல் கொடுக்கிறார்கள். நாம் ஒன்றும் செய்ய முடியாது. 234 தொகுதிகளிலும் கல்லூரிகள் கேட்பதற்கு எல்லோரும் தயாராக இருக்கிறார்கள்—இதில் இப்பொழுது ஏழு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இந்த ஆண்டு முதல் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒன்று திருக்கோவிலூர்; மற்றொன்று காரப்பட்டு, செங்கம், திருவாரூர் மாவட்டத்திலுள்ள கொருக்கை, திருத்துறைப்பூண்டி, கரூர் மாவட்டத்திலுள்ள தான்தோனி, கீழ்களவாய்வேலூர், பொன்மண்டஹள்ளி, கோட்டூர் ஆகிய ஏழு இடங்களிலே பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மேலும் வருகிறபொழுது, வாய்ப்புகள் கிடைக்கிறபோது நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசிலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் ஆசியோடும், மாண்புமிகு துணை முதல்வர் தளபதி அவர்களின் நல்வாழ்த்துக்களோடும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், குளித்தலை தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரி தொடங்கப்படுமென, 2007 ஆம் ஆண்டு பேரவையில் அறிவித்தார்கள். என்னுடைய கோரிக்கையை ஏற்று, அந்தக் கல்லூரிக்கு ‘டாக்டர் கலைஞர் சட்டமன்றப் பொன்விழா அரசுக் கலைக் கல்லூரி’ என்ற பெயரிடப்பட்டு அழைக்கப்படுமென்ற அறிவிப்பை வெளியிட்டார்கள். 3-8-2007-இல் கல்லூரிக்கான அரசாணை வெளியிடப்பட்டு, 12-10-2007-ஆம் தேதியன்று மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் பொன்முடி அவர்கள் குளித்தலைக்கு வருகை தந்து, கல்லூரியை வாடகைக் கட்டடத்தில் துவக்கி

வைத்தார்கள். அதன் பிறகு, குளித்தலை அருகிலுள்ள ஐயர்மலைப் பகுதியில் சுமார் 23 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசு நிலத்தை உயர் கல்வித் துறைக்கு பெயர் மாற்றம் செய்து, 2.84 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கல்லூரிக்கு எழில்மிகுந்த கட்டடத்தைக் கட்டி, கடந்த 8-12-2010 தேதியன்று மாண்புமிகு துணை முதல்வர் தளபதி அவர்கள் வருகை தந்து, கல்லூரியைத் திறந்து வைத்து என்னையும், தொகுதி மக்களையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினார்கள்.

அந்தக் கல்லூரியில் 350 மாணவ மாணவிகள் பட்டப் படிப்பு படித்து முடித்துவிட்டார்கள். தற்போது 875 மாணவ மாணவிகள் படித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதில் 70 சதவிகிதம் மாணவிகள் என்பது மகிழ்ச்சியான செய்தியாகும். அனைத்து மாணவ, மாணவிகளும் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய கீழ்த்தட்டு மக்களாகும். கல்லூரியை வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் தளபதி அவர்களுக்கும், உயர் கல்வித் துறை அமைச்சர் திரு. பொன்முடி அவர்களுக்கும், தொகுதி மக்களின் சார்பாக எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்படி கல்லூரிக்குச் சுற்றுச் சுவர் மற்றும் மாணவர்களுக்கான விடுதி இல்லை. ஆகவே, அதனையும் வழங்க வேண்டும். மேலும் பி.காம் இளங்கலைப் பாடப் பிரிவும், எம்.ஏ., எம்.எஸ்சி. போன்ற முதுகலைப் பாடப் பிரிவுகள் தொடங்கிட வேண்டுமென்றும் தங்களின் வாயிலாக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த அரசு பொறுப்பேற்ற ஐந்து ஆண்டுகளில் இதுவரையில் வரலாற்றில் இல்லாத அளவிற்கு 13 கலைக் கல்லூரிகளை உருவாக்கியிருப்பது கலைஞர் ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி). அதேபோல, அண்ணா பொறியியல் கல்லூரியையும், கிட்டத்தட்ட 7 பொறியியல் கல்லூரிகளையும் உருவாக்கியிருப்பது கழக அரசுதான். மூன்று அண்ணா பல்கலைக்கழகங்களையும் உருவாக்கியிருப்பது கலைஞர் அரசுதான். அரசுத் தரப்பில் எந்தெந்த இடங்கள் பின்தங்கிய இடங்களாக

TRUTH ALONE TRIUMPHS

2011 பிப்ரவரி 8]

இருக்கின்றனவோ, அந்த இடங்களில் எல்லாம் கல்லூரிகளைத் துவக்கியிருக்கிறோம். அப்படித் துவக்கப்பட்டவற்றில், குளித்தலை கல்லூரி தொடங்கப்பட்டு இரண்டு, மூன்று ஆண்டுகள் ஆகின்றன. ஆகவே, அதனுடைய தேவையை அடிப்படையாகக்கொண்டு, இந்த ஆண்டு P.G. Course, பட்ட மேற்படிப்புகள் வேண்டுமென்று விண்ணப்பித்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பல்கலைக்கழகத்தினுடைய அனுமதியும் பெற்றிருப்பதாகச் சொல்லியிருக்கிறார். நேற்றையதினம் நான் இயக்குநர் அவர்களிடம் பேசியிருக்கிறேன். இந்த ஆண்டே மேற்படிப்புகளைத் துவக்குவதற்கான வாய்ப்புகள் உருவாக்கித் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நல்லாட்சியில் உயர் கல்வித் துறை மிகச் சிறப்பான கல்வியை ஏழை எளிய மாணவ மாணவிகளுக்குத் தந்துகொண்டிருக்கின்றது. தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான், அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும், அரசு உதவிபெறும் கல்லூரிகளிலும் படிக்கின்ற மாணவ, மாணவிகள் 2007 ஆம் ஆண்டு முதல் கல்விக் கட்டணம் இல்லாமல் படிக்கின்ற வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது. இந்த வாய்ப்பைப் பல்கலைக்கழகங்கள்மூலம் நடத்தப்படுகின்ற பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவ, மாணவிகளுக்கு இலவசக் கல்வியை தலைவர் கலைஞருடைய ஆட்சியில் நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நடைமுறைப்படுத்துவார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் என்ன கேட்டார்? இலவச கல்வியா?

[2011 பிப்ரவரி 8

திரு. மு. அப்பாவு: பல்கலைக்கழகங்களின் உறுப்புக் கல்லூரிகளில் இலவச கல்வி வேண்டுமென்று கேட்டேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: அதுதான் இப்போது இருக்கிறதே!

திரு. மு. அப்பாவு: இப்போது இல்லை, கட்டணம் கட்ட வேண்டும். அதாவது, பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவ, மாணவிகளுக்குக் கட்டணம் இரத்து செய்யப்படவில்லை.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகள் அரசுத் தரப்பிலே நடத்தப்படுகின்றன. பல்கலைக்கழகங்களுடைய உறுப்புக் கல்லூரிகளாகப் பல்கலைக்கழகங்களே கல்லூரிகளைத் திறந்து வைக்கின்றன. இப்போது திறக்கப்பட்டிருக்கின்ற கல்லூரிகளெல்லாம் பல்கலைக்கழகங்களின் மூலமாகத் திறக்கப்பட்ட உறுப்புக் கல்லூரிகள்தான். அவர்தான் முதலில் சொன்னார். நாங்களே எல்லாம் பார்த்துக்கொள்கிறோம், பணம் கட்டுகிறோம், எல்லாம் கொடுக்கிறோம் என்று. அப்படிச் சொல்லிவிட்டு, இப்போது, 'எல்லாம் இலவசமாகக் கொடுங்கள்' என்று சொன்னால், அது பல்கலைக்கழகங்களுடைய சுமையை அதிகரிப்பதாக அமையும். பல்கலைக்கழகங்கள் சுயாட்சி அதிகாரங்கள் பெற்றவை. குறிப்பாக, புதிய பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படுகிறபோது, அரசு என்ன விதிகளைப் பின்பற்றுகிறதோ, அவற்றைத்தான் பின்பற்ற வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறோம். அதை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் எடுப்போம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னச்சாமி.

திரு. செ. சின்னச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மருங்காபுரி தொகுதியில் அரசுக் கல்லூரியோ அல்லது தனியார் கல்லூரிகள் என்பதோ இல்லாத நிலை உள்ளது. இதிலே மருங்காபுரி தொகுதி, மணப்பாறை ஒன்றியத்தில் ஏறத்தாழ 21 ஊராட்சிகளும், வையம்பட்டி ஒன்றியத்திலே 18 ஊராட்சிகளும், மருங்காபுரி ஒன்றியத்திலே 49 ஊராட்சிகளும், ஒரு பேரூராட்சியும் உள்ளடங்கிய தொகுதியாகும்.

2011 பிப்ரவரி 8]

அங்கு மணப்பாறை நகராட்சியும் இருக்கிறது. மருங்காபுரி தொகுதி, மணப்பாறை தொகுதியாக பெயர் மாறியிருக்கிற இந்த நிலையிலே, நான் அங்கே அரசினுடைய கலை, அறிவியல் கல்லூரி வேண்டுமென்று சென்ற ஆண்டு கோரிக்கை வைத்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே தனியார் கல்லூரி இருப்பதாக பதில் அளித்தார்கள். அங்கேயுள்ள தனியார் கல்லூரியிலே கலை, அறிவியல் பாடப் பிரிவுகள் இல்லை. எனவே, ஏழையெளிய மாணவிகள் படிப்பதற்கான வாய்ப்பு குறைவாக இருக்கிறது என நான் அப்போதே குறிப்பிட்டேன். 'பிறகு அது எடுத்துக்கொள்ளப்படும்' என்று குறிப்பிட்டார்கள். ஆனால், இன்றைக்கு இந்தத் தொகுதியைப் பொறுத்தவரையில், சுமார் 7 ஆயிரம் மாணவர்கள் பிளஸ் 2 முடிக்கிறார்கள். இதிலே 1,500 மாணவர்கள்தான் திருச்சியிலே இருக்கிற கல்லூரியில் தங்களுடைய மேல் படிப்பினைத் தொடங்குகிறார்கள். மீதமிருக்கிற, ஏறத்தாழ 5,500 மாணவ, மாணவிகள் மேல் படிப்பைத் தொடங்க முடியாமல் தினக்கூலிக்கும், வேடசந்தூர், ஒட்டன்சத்திரம் போகிற பகுதியிலே இருக்கிற மில்களுக்கும் அந்த மாணவிகள் வேலைக்குச் செல்கிற நிலை இருக்கிறது. பின்தங்கிய பகுதியான அந்தப் பகுதியிலே கல்லூரியை அமைக்காத காரணத்தால் அந்த மாணவிகள் மில்லுக்குச் செல்கிறபோது, ஏறத்தாழ 3 ஆண்டுகள் முழுமையாக அந்த மில்லிலே பணியாற்றினால்தான் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கல்லூரி கேட்கிறீர்கள், அவ்வளவுதானே!*

திரு. செ. சின்னச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் கொடுங்கள். 3 ஆண்டுகள் பணியாற்றினால் திருமணத்திற்கு 25,000 ரூபாய் தருவதாக அந்த ஆலை நிர்வாகம் சொல்கிற காரணத்தாலே, அந்த மாணவிகளுக்குத் திருமணமாவதற்கு முன்பாகவே உடல் நிலை பாதிக்கப்படுகிற ஒரு சுழல் ஏற்படுகிறது. அந்த மாணவிகளுடைய நலன் கருதி அவர்கள் மேல் படிப்பைப் படிப்பதற்கு மணப்பாறை பகுதியிலே அரசினுடைய கலை, அறிவியல் கல்லூரியை இந்த அரசு அமைத்துத் தர வேண்டுமென அன்போடு கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

[2011 பிப்ரவரி 8

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதைப்போல, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, பல்வேறு அரசுக் கலைக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் எல்லாம் படிப்படியாக உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவருடைய தொகுதியிலே ஒரு தனியார் கல்லூரி இருப்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார். அதிலே கலைப் பாடங்கள், அறிவியல் பாடங்கள் இல்லை என்று சொல்லியிருக்கிறார். மத்திய அரசாங்கமும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி—இப்போது கலைப் பாடங்கள், அறிவியல் பாடங்களைவிட மாணவர்கள் பெரும்பாலும் பொறியியல் படிப்புகளையும், மருத்துவப் படிப்புகளையும் தேர்ந்தெடுக்கிற நிலையுள்ளது. அதையும் மாற்றி basic science—அடிப்படை அறிவியல் பாடங்களை, கலைப் பாடங்களை வளர்க்க வேண்டுமென்றும் இந்த அரசு பல்வேறு முயற்சிகளை, நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதன் விளைவாகத்தான் இருக்கிற கல்லூரிகளிலேகூட shift முறையைக் கொண்டு வந்ததன் விளைவாக மொத்த பட்டதாரிகள், பொறியியல், மருத்துவம் இதையெல்லாம் படித்துவிட்டுப் போனவர்களுடைய எண்ணிக்கை, 2005-2006-ல் 2 இலட்சத்து 82 ஆயிரத்து 802 பேர்தான். ஆனால், கலைஞர் ஆட்சியில், நான்கரை ஆண்டுகளில் 2010-2011-ல் படிக்கின்ற பட்டதாரி மாணவர்களுடைய எண்ணிக்கை 6 இலட்சத்து 9 ஆயிரத்து 752 ஆகும்; கிட்டத்தட்ட இரண்டரை மடங்கு ஏறியிருக்கிறது என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குக் காரணம் இந்த அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகள்தான். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய பகுதியிலே கலை, அறிவியல் கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார். நிச்சயமாக அடுத்த முறை வருகிறபொழுது அதைப் பரிசீலித்து இந்த அரசு கண்டிப்பாகச் செய்யும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன்.

திரு. த.அ. மேகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், எனது காவேரிப்பட்டினம் தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரி எதுவும் இல்லை.

2011 பிப்ரவரி 8]

அதேபோல பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் எவையும் இல்லை. எந்தத் தனியார் கல்வி நிறுவனமும் இல்லை. மேலும், கிருஷ்ணகிரி மாவட்டம் பின் தங்கிய மாவட்டம். தருமபுரி மாவட்டத்திலிருந்து கிருஷ்ணகிரி மாவட்டம் பிரிக்கப்பட்டு, அந்தப் பகுதியிலும் கல்வியில் எந்தவித வளர்ச்சியும் இல்லை. என்னுடைய தொகுதி பின்தங்கிய பகுதி. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதி. எனவே, அந்தப் பகுதியில் கல்வி வளர்ச்சியடைய வேண்டுமானால் கட்டாயமாகக் கல்வி நிறுவனங்கள் அமைக்கப்பட வேண்டும். என்னுடைய தொகுதியில் எந்தவித தனியார் அல்லது அரசு சார்ந்த கல்வி நிறுவனமும் இல்லை என்பதுதான் குறிப்பிடத்தக்கது. எனவே, அமைச்சர் அவர்கள், தொகுதி வாரியாகக் கட்டாயமாகக் கணக்கெடுத்து, எந்தெந்தத் தொகுதியில் இந்த மாதிரி நிலை ஏற்பட்டுள்ளதோ, அந்தந்தத் தொகுதிகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அந்தத் தொகுதிகளில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, அரசுக் கல்லூரி போன்ற அரசு சார்ந்த கல்வி நிறுவனங்களை அமைக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு ஆளுநர் உரையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓசூரிலே ஒரு கலைக் கல்லூரி திறக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. உங்கள் தொகுதிக்கு நீங்கள் சொல்வது—234 தொகுதிகளுக்கும் கல்லூரி வேண்டுமென்ற ஒரு கோரிக்கை வைத்திருந்தாலும் மொத்தம் இருக்கிற அரசுக் கலைக் கல்லூரிகளே 62—நீங்கள் வைத்திருக்கிற கோரிக்கை, எங்களுக்கும் அதிலே எண்ணமிருந்தாலும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் 27 மத்திய அரசு வழங்கியிருப்பது. இதுபோன்ற அரசுக் கல்லூரிகள் இல்லாத பகுதிகளுக்குத்தான் அவை வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த நிலை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருக்குமானால் பிறகு பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. லட்சுமணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.